**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S. No. 130 of 2018

Deposition of P.W.2

Name of the Witness: திரு.கிருஷ்ணன்

Date : 03.06.2025

***1, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை***

நான் பாப்பாரப்பட்டியில் குடியிருக்கிறேன். நான் எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். எனக்கு வழக்கு விவரங்கள் தெரியும். எனக்கு வாதி, பிரதிவாதிகளை நேரடியாக தெரியும். 1ம் பிரதிவாதி குமாரசாமிபேட்டையில் இருக்கிறார். எனக்கு அவரை 15 வருடமாக தெரியும். தாவா சொத்துக்களை நேரில் பார்த்திருக்கிறேன். பென்னாகரம் மெயின்ரோடில் வீடுள்ளது. 2017ல் பென்னாகரம் மெயின் ரோடில் உள்ள சக்தி வீட்டில் கேட்டேன். இந்த விவரத்தை என்னுடைய பிரமாண வாக்குமுலத்தில் சொல்லியுள்ளேன். நான் அதுபோல என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில சொல்லவில்லை என்றால சரியல்ல. ஆட்டுகாரம்பட்டியில் உள்ள சொத்துக்கள் ஒரு ஏக்கர் 80 சென்ட். அதன் சர்வே எண் எனக்கு தெரியாது.

2) வாதி ஏற்கனவே முதன்மை சார்பு நீதிமன்றத்தில் ஒரு வழக்கு போட்டு அதை திரும்ப பெற்று கொண்ட விவரம் எனக்கு தெரியாது. வெள்ளேகவுண்டன்பாளையத்தில் உள்ள சொத்துக்களின் சர்வே எண் எனக்கு தெரியாது. வாதிக்கு அவருக்குண்டான பாகத்திற்கு பணமாக கொடுத்ததால் தான் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் போட்ட வழக்கை திரும்ப பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)